கிறிஸ்துவே கடவுளிடமிருந்து நமக்கு வரும் ஞானம்

1கொரிந்தியர் 1:30



# ஞான ஒலி

இணைய வார இதழ்

ஞானம் 5 - ஒலி 38 | 18-09-2022

www.newwisdomministries.com




## சிறந்தது சிறப்பானவருக்குத்தான்...

தலையங்கம்



# நமக்கானது நமக்கு மட்டுமே வேறொருவருக்கல்ல

அருட்பணி. சைமன் பீட்டர்

அன்பான ஞான ஒலி இணைய இதழின் வாசக பெருமக்களே உங்கள் அனைவருக்கும் என் அன்பான வணக்கங்கள்.

சபை உரையாளர் 3ம் அதிகாரம் 11ம் வசனத்தில் கடவுள்கூட எதையும் காலத்திற்கு உட்பட்டே அதனதன் காலத்தில்தான் செய்கிறார் என்று கூறுவதை இப்போது படிப்போம்.

கடவுள் ஒவ்வொன்றையும்
அதனதன் காலத்தில செம்மையாகச் செய்கிறார்.
காலத்தைப் பற்றிய உணர்வை மனிதருக்குத்
தந்திருக்கிறார். ஆயினும், கடவுள் தொடக்க முதல்
இறுதிவரை செய்து வருவதைக் கண்டறிய
மனிதரால் இயலாது. – சபை உரையாளர் 3:11

நமது வீடுகளில் ஆக்கப் பொறுத்தவங்க ஆறப் பொறுக்கக் கூடாதா? என்று சொல்வதைக் கேட்டிருப்போம். அதுவும், எதற்கும் ஒரு காலம் உண்டு என்பதையே வலியுறுத்துகின்றது.

விதைத்தவுடன் பழத்தை எதிர்பார்க்க முடியாது. அந்தப் மரத்தின் கனியை சுவைக்க வேண்டுமென்றால் அந்த மரம் கனிதரும் பருவம் வரும்வரை நாம் காத்திருக்கத்தான் வேண்டும்.

உரு கொண்ட அனைத்தும் காலத்திற்கும், இடத்திற்கும் கட்டுப்பட்டதே. கடவுளும் தான் படைத்த அந்த காலத்திற்கும் கட்டுப்பட்டே மனிதர்களுக்கான தனது செயல்களைச் செய்கின்றார்.

ஆதாம் இறைவனின் அன்பை இழந்த பிறகு, அந்த மனித குலத்தை மீட்க அவர் தீட்டிய திட்டத்தை நிறைவேற்ற பல்லாயிரம் ஆண்டாகக் காத்திருந்த பிறகே தனது மகன் இயேசுவை இவ்வுலகிற்கு அனுப்பினார்.

அதுவும் அன்னை மரியாளின் சம்மதத்தைப் பெறும் வரை அவர் காத்திருக்கிறார். அன்னை மரியாள் இதோ உமது அடிமை உமது வார்த்தையின்படியே நடக்கட்டும் என்று சொன்ன அந்த நிமிடம் வரை கடவுள் காத்திருக்கின்றார்.

அனைத்தும் காலத்திற்கு உட்பட்டதே. காலத்தை மீறி யாராலும் எதுவும் செய்யமுடியாது.

சில சமயம் நமது செபத்திற்கு உடனே பலன் கிடைக்கும். பல சமயம், நம் செபம் கேட்கப்படாமலேயே இருக்கும். பல மாதங்கள், பல வருடங்கள்கூட நமது செபம் எந்தப் பலனையும் தராது. விரக்தியடைந்து போவோம். செபிப்பதைக்கூட நிறுத்திவிடுவோம். நமது நம்பிக்கை செயலிழந்துபோகும்.

ஆனால், இந்தக் கால தாமதம், எதற்கும் ஒரு காலம் உண்டு என்பதையும், கடவுள் செயல்பாடுகள்

நமது கட்டுப்பாட்டுக்குள் இல்லை என்பதையும், நமக்கு எது தேவை, எப்போது தேவை என்பது கடவுளுக்குத் தெரியும் என்பதையும் நாம் நினைவில் கொண்டு நமது நம்பிக்கையை வலுப்படுத்திக் கொள்ள வேண்டும். இன்னும் சிறப்பாக நமது நம்பிக்கையை வலுப்படுத்தவும், சோதிக்கவுமே, இந்தக் கால தாமதம் தரப்பட்டுள்ளது என்பதைப் புரிந்து கொள்ள வேண்டும். அப்படிப் புரிந்து கொண்டால் கடவுள் நிச்சயம் நம்மை வாழ வைப்பார், எவ்வளவு காலம் ஆனாலும் பராவாயில்லை. காத்திருப்போம். இப்போது நமது பணியை சிறப்பாய் செய்வோம். இருப்பதைக் கொண்டு மனநிறைவோடு வாழ்வோம். கேட்பது நமது வேலை, மற்றவை கடவுளைச் சார்ந்தது என்பதை மனதில் கொண்டு நமது வாழ்வை நடத்திச் செல்வோம். அதுதான் உண்மையான நம்பிக்கையாளரின் செயல். அத்தகைய மனிதரே இறைவனின் பிள்ளைகள்.

நமது செபம் நீண்ட காலம் பலன் கொடுக்கவில்லை என்றால், அது நமது நன்மைகாகவே என்றும், நமக்கு வரப்போகிற ஆசீர்வாதங்கள் மிகப்பெரியதாகவும், அற்புதமாகவும் இருக்கும் என்ற நினைவுகள் நமக்கு பேரானந்தத்தைத் தரும். நமது நம்பிக்கையும் வீண்போகாது.

நம்புகிறவருக்கு எல்லாம் நிகழும்
– மாற்கு 9:23

என்று இயேசுவே சொல்லியுள்ளார்.

ஒருமுறை ஒரு நாயும், ஒரு யானையும் ஒரே நேரத்தில் கற்பமாயின. மூன்று மாதங்கள் கழித்து அந்த நாய் ஆறு நாய்க் குட்டிகளை ஈன்றது. பிறகு ஆறு மாதங்கள் கழித்து அந்த நாய் மீண்டும் கற்பமானது, அச்சமயம் அது பத்து நாய்க்குட்டிகளை ஈன்றது. பிறகு ஒன்பது மாதம் கழித்து அந்த நாய் மீண்டும் கற்பமானது, அப்போது அது ஆறு நாய்க் குட்டிகளை ஈன்றது. ஆனால் அந்த யானை இதுவரை ஒரு முறைகூட குட்டிபோடவில்லை.

அப்போது அந்த நாய் அந்த யானையிடம் சென்று. நீயும் நானும் ஒரே நேரத்தில்தான் கற்பமானோம். ஆனால், இதுவரை மூன்று பிரவசவத்தில் 22 நாய்க்குட்டிகளை பெற்றெடுத்துவிட்டேன். அவைகளும் வளர்ந்து பெரிய நாய்க் குட்டிகளாகிவிட்டன. ஆனால் நீ இதுவரை ஒருமுறைகூட நீ குட்டி போடவில்லை. உண்மையாகவே நீ கற்பமாக இருக்கின்றாயா? இல்லையா? என்று கேட்டது.

அப்போது அந்த யானை, அந்த நாயைப் பார்த்து, நீ ஓர் உண்மையைப் புரிந்து கொள்ள வேண்டும். நீ நாய். நான் யானை. நான் கர்ப்பமாய் இருக்கின்றேன். நான் சுமப்பது ஒரு யானைக்குட்டி. நாய்க்குட்டிகளல்ல. நான் இரண்டு வருடத்திற்கு ஒருமுறைதான் ஒருமுறைதான் கற்பமாவேன், அதில் ஒரு யானைக்குட்டியைப் பெற்றெடுப்பேன். நான் பிரசவிக்கும் யானை பெரியது, அது தரையைத் தொடும்போது இந்த மண் அதிரும். அது சாலைகளில் நடக்கும்போது மக்கள் தங்கள் வேலைகளையெல்லாம் விட்டுவிட்டு எங்களை ஆச்சரியமாகப் பார்த்து இரசிப்பார்கள். நாங்கள் இருந்தாலும் ஆயிரம் பொன், இறந்தாலும் ஆயிரம் பொன் என்று சொன்னது யானை.

அதுபோல நமது செபம் கேட்கப்படவில்லை என்றால் கடவுள் நமக்குத் தரப்போகிற ஆசீர்வாதம் அற்புதமாகவும், மக்களே பார்த்துப் பிரமிப்பதாகவும் இருக்கப்போகிறது என்ற நம்பிகை நமக்கு வேண்டும். அந்த நமது நம்பிக்கையின் படி செயல்பட கடவுள் காத்திருக்கின்றார். அவர் பார்வையில் நாம் சிறப்பானவர்கள். ஆகவே, நமக்கு ஆகச் சிறந்ததைத்தான் தருவார்.

மக்கள் மன்றத்தில் பலர், தங்கள் செபம் கேட்கப்பட்டது என்று சாட்சி சொல்லும்போது, நமது செபம் கேட்கப்படவில்லையே என்ற ஆதங்கம் நமக்கு வரும். ஆனால், அச்சமயம் நமது நம்பிக்கை அதிகரிக்க வேண்டும்.

நமது நம்பிக்கையின்படி அனைத்தும் நடக்கும். அதுதான் இறைவன் வகுத்த திட்டம்.

உங்கள் செபம் கேட்கப்படாமல் இருக்கின்றதா? உண்மையிலேயே நீங்கள் கொடுத்து வைத்தவர்கள். உங்கள் வாழ்வு ஆஹா, ஓஹோ என்று ஆகப்போகின்றது. ஆமென். ஆமென்.

நல்ல காலம் பொறக்கப் போகுது
நல்ல காலம் பொறக்கப் போகுது.



# விவிலியம் அறிவோம் – 56

அருட்பணி. ஆ. அலெக்ஸ் CMF

## மிதியானில் மோசே

பார்வோன் மோசேயைக் கொல்லத் தேடியதால் மோசே எகிப்திலிருந்து தப்பியோடி மிதியான் நாட்டிற்கு வந்தார் என்பதைப் பார்த்தோம். பார்வோன் மோசேயைக் கொல்லத் தேடுவதற்கு அடிப்படைக் காரணம் அவர் வேற்றினத்தவர் என்பதுதான். எகிப்தியர் தங்கள் இனத்தை பெருமையாக நினைப்பவர்கள். வேற்றினத்தவரை அவர்கள் இழிவானவர்களாகவேக் கருதினர். எனவே வேற்றினத்தவர் ஒருவர் எகிப்தியன் ஒருவனைக் கொலை செய்வது கொடிய குற்றமாகவே கருதப்பட்டது. அதற்கான தண்டனை மரணம்தான். எனவேதான் மோசே தப்பியோடுகிறார். மிதியான் நாட்டிற்கு வந்து அங்கே குடியிருக்கிறார். மிதியானியர்கள் ஆபிரகாமின் வழித்தோன்றல்கள்தான். ஆபிரகாமுக்கு கெற்றூரா என்ற பெண்ணின் வழியாக பிறந்தவர் மிதியான் (தொநூ 25:2) அவரது வழித்தோன்றல்கள்தான் மிதியானியர். மிதியான் நாடு ஒரு பாலைவனப் பகுதி. இன்று சவுதி அரேபியா என அழைக்கப்படும் நாட்டின் வடமேற்குப் பகுதி.

விவிலியத்தில் இப்பகுதி சேயிர், தேமான், பாரான் மற்றும் ஏதோம் என பல பெயர்களில் அழைக்கப்படுகிறது. இந்நாடு கடவுளின் மலை என அழைக்கப்படும் சீனாய் மலையுடன் தொடர்புடையது (காண் நீத 5:4-5; இச 33:2; திபா 68:9; அபாகூக் 3:3, 7). எகிப்திலிருந்து தப்பியோடிய மோசே மிதியானில் சிலகாலம் குடியிருக்கிறார். ஒருநாள் ஒரு கிணற்றருகே வந்து அமர்ந்திருக்கிறார். அப்போது இரகுவேல் என்ற அர்ச்சகரின் ஏழு புதல்விகள் தங்கள் தந்தையின் மந்தைகளுடன் அங்கு வருகிறார்கள். பொதுவாக ஆண்கள்தான் மந்தைகளை மேய்க்கும் வேலைகளைச் செய்வார்கள். ஆண்கள் இல்லாத வீடுகளில்தான் பெண்கள் ஆடுகளை மேய்க்கும்



பாதுகாப்பளிக்கின்றார். அவர்கள் ஆட்டு மந்தைகளுக்கு தண்ணீர் காட்டவும் உதவுகின்றார்.

மோசே தங்களுக்கு உதவியதால் இரகுவேலின் புதல்விகள் வழக்கத்திற்கு மாறாக விரைவாகவே வீடு செல்கிறார்கள். தனது புதல்விகள் விரைவாக வந்ததன் காரணத்தைக் கேட்ட இரகுவேல் மோசே அவர்களுக்குச் செய்த உதவியைப்பற்றி அறிய வருகின்றார். மோசே அவர்களின் வீட்டிற்கு அழைக்கப்படுகின்றார். மோசேயின் கதையை அறிந்துகொண்ட இரகுவேல் அவரது வீட்டிலேயே மோசே தங்குவதற்கு அனுமதிக்கின்றார். அவரது ஆட்டு மந்தைகளை மேய்க்கும் பொறுப்பை இரகுவேல் மோசேயிடம் ஒப்படைக்கின்றார். எகிப்தில் அரச மாளிகையில் வாழ்ந்த மோசே மிதியானில் ஒரு ஏழை ஆட்டிடையனாக வாழத்தொடங்குகின்றார். புதல்வர்கள் இல்லாத இரகுவேலுக்கு மோசேயின் வரவு நன்மை பயப்பதாகவே உள்ளது. எனவே மோசேயை தொடர்ந்து தன்னுடன் வைத்துக்கொள்வதற்காக, இரகுவேல் தம்மகள் சிப்போராவை மோசேக்கு மணமுடித்து வைக்கின்றார்; அடைக்கலம் தேடிவந்த மோசே இப்போது அர்ச்சகரான இரகுவேலின் மருமகனாக வாழ்க்கையைத் தொடர்கின்றார். நாள்கள் நகர்கின்றன. மோசேக்கு சிப்போரா ஒரு மகனைப் பெற்றெடுக்கின்றாள். குழந்தைக்கு பெயரிட வேண்டிய காலம் வந்தபோது, 'நான் வேற்று நாட்டில் அன்னியனாய் உள்ளேன்' என்று கூறி மோசே

அவனைக் 'கேர்சோம்' என்று பெயரிட்டழைக்கின்றார். மோசேயின் திருமணம் மிதியானியர்களுக்கும் இஸ்ரயேலர்களுக்கும் தொடர்புடைய ஒரு மரபை எதிரொலிக்கிறது. பண்டைய காலத்தில் மிதியானியர்கள் வணிகர்களாக இருந்தார்கள். இஸ்ரயேலர்களுடன் திருமண உறவு வைத்திருந்தார்கள். ஆனால் பிற்காலத்தில் இந்த உறவில் மாற்றம் ஏற்படுகிறது. இரண்டு இனத்தினரும் பகைவர்களாக மாறுகின்றார்கள்.

மோசே மிதியானில் வாழ்ந்துகொண்டிருக்கும் இக்காலகட்டத்தில் எகிப்தில் காட்சி மாறுகிறது. மோசேயைக் கொல்லத் தேடிய பார்வோன் மன்னன் இறந்துவிடுகின்றான். இந்தப் பார்வோனின் பெயர் கொடுக்கப்படவில்லை. புதிய பார்வோனின் ஆட்சியில் இஸ்ரயேல் மக்களின் அடிமைத்தனம் வலுக்கிறது. பலவிதமான கொடுமைகளுக்கும் அவர்கள் ஆளாக்கப்படுகிறார்கள். எனவே அவர்கள் அழுது புலம்புகின்றனர். தங்கள் நிலையைக் குறித்து கடவுளிடம் முறையிடுகின்றனர். பெரும்பாலான அறிஞர்களின் கருத்துப்படி எகிப்தை ஆட்சி செய்த இரண்டாம் இராம்சேசு காலத்தில்தான் இஸ்ரயேல் மக்கள் பலவிதமான கொடுமைகளுக்கும் உட்படுத்தப்பட்டனர். இரண்டாம் இராம்சேசு தேசபக்தி மிகுந்தவன். மாறுபட்ட இனங்களால் நிறைந்திருந்த எகிப்து நாட்டை ஓரின மக்களின் ஆதிக்கத்தில் கொண்டுவர விரும்பினான். இதனால் வேற்றின மக்களை கட்டாய வேலைகளுக்கு உட்படுத்தினான். வேற்றின மக்கள் ஆண் குழந்தைகள் பெற்றுக்கொள்வதைத் தடைசெய்தான். எல்லா ஆண் குழந்தைகளையும் கொல்வதால் தனக்கு எதிரிகள் உருவாகமாட்டார்கள் என நினைத்தான். திருப்பாடல் 137 ல் வரும் குழந்தைகளைப் பிடித்து பாறையின்மேல் மோதி அடித்தல் பார்வோன் மன்னனின் செயலைச் சுட்டிக்காட்டுவதாககூட இருக்கலாம் என்பது ஒருசில அறிஞர்களின் கருத்தாக இருக்கிறது. விவிலியம் சாராத மூலங்களிலிருந்தும் இஸ்ரயேல் மக்கள் எகிப்தில் வாழ்ந்ததாகக் கருதப்படும் இக்காலகட்டத்தில் பல கட்டடப் பணிகள் நடந்ததாக நாம் அறியவருகிறோம் குறிப்பாக அக்காலகட்டத்தில் கர்னாக், அபு-சிம்பல், இராம்சேசு, பித்தோம் முதலிய நகர்கள் கட்டியெழுப்பப்பட்டன. இந்த நகர்களின் கட்டடப் பணிகளுக்கு ஏராளமான பணியாட்கள் தேவைப்பட்டனர். அந்த அளவிற்கு அடிமைகளோ, சிறைக்கைதிகளோ அப்போது எகிப்தில் இல்லை. எனவே எகிப்தில் வாழ்ந்த எபிரு அல்லது அபிரு என்று அழைக்கப்பட்ட மக்களினம் எகிப்தியர்களால் அடிமைகளாய் நடத்தப்பட்டார்கள், கடினமான வேலைகள் செய்ய கட்டாயப்படுத்தப்பட்டார்கள் என வரலாறு பதிவுசெய்கிறது. இந்த எபிரு அல்லது அபிரு என்று அழைக்கப்பட்டவர்கள் இஸ்ரயேல் மக்களே என்பது பலருடைய கருத்து.

இஸ்ரயேல் மக்களின் மோசமான நிலையை விடுதலைப் பயணம் நூல் இரண்டு வார்த்தைகளில் வெளிப்படுத்துகிறது. யாவே மரபில் oniy என்ற சொல்லும் (விப 3:7) ஏலோகீம் மரபில் lagan என்ற சொல்லும் (விப 3:9) இதற்குப் பயன்படுத்தப் படுகின்றன. oniy என்ற சொல்லுக்கு துன்புறுத்தப்படுதல், ஏழ்மை, மனமுடைந்தநிலை என்ற பொருள்கள் உண்டு. lagan என்ற சொல்லுக்கு பிழிதல், ஒடுக்குதல் போன்ற அர்த்தங்கள் உண்டு. அதாவது இஸ்ரயேல் மக்கள் எகிப்தியர்களால் அடக்கி ஒடுக்கப்பட்டார்கள், துன்புறுத்தப்பட்டார்கள், பிழிந்தெடுக்கப்பட்டார்கள். அதனால் மனமுடைந்தவர்களாக, ஏழ்மையில் உழன்றவர்களாக இருந்தார்கள் என்று கூறலாம். எனவேதான் அவர்கள் அழுது புலம்புகின்றனர்; கடவுளிடம் முறையிடுகின்றனர். அடிமைத்தனத்திலிருந்து எப்படியாவது வெளிவரவேண்டும் என விரும்புகின்றனர். கடவுளும் அவர்களின் புலம்பலைக் கேட்கின்றார். ஆபிரகாமுடனும், யாக்கோபுடனும் தாம் செய்திருந்த உடன்படிக்கையை நினைவு கூர்கின்றார். இஸ்ரயேல் மக்களின் இந்தப் புலம்பல்களும் முறையீடுகளும் திருப்பாடல்களில் வருகின்ற புலம்பல் பாடல்களை நினைவூட்டுகின்றன. உதாரணமாக,திபா 74 ஐக் கூறலாம். இப்பாடலில் மக்கள் ஒரு குழுவாக கடவுளிடம் தங்கள் வேண்டுதல்களை எழுப்புகின்றனர்; உடன்படிக்கையை நினைவுகூர்ந்து அருள்புரிய ஆண்டவரைக் கேட்கின்றனர். அவர்களின் வேண்டுதல் விண்ணகத்தை எட்டுகிறது. கடவுள் அவர்களின் வேண்டுதலைக் கேட்கிறார், குலமுதுவர்களுடன் செய்த உடன்படிக்கையை நினைவுகூர்கிறார்.

எகிப்தில் நிலமை இப்படியிருக்க மோசே மிதியானில் தனது மாமனாரின் ஆட்டு மந்தையை மேய்த்து வருகிறார். விப 3:;1 இல் மோசேயின் மாமனார் பெயர் இத்திரோ எனக் குறிப்பிடப்படுகிறது. விவிலியத்தில் மோசேயின் மாமனாரின் பெயர் பற்றிய சில குளறுபடிகள் உள்ளன என்பதை மறுக்கமுடியாது. உதாரணமாக, விப 3:1; 4:18 மற்றும் 18:1 ஆகிய

அவனைக் ‘கேர்சோம்’ என்று பெயரிட்டழைக்கின்றார். மோசேயின் திருமணம் மிதியானியர்களுக்கும் இஸ்ரயேலர்களுக்கும் தொடர்புடைய ஒரு மரபை எதிரொலிக்கிறது. பண்டைய காலத்தில் மிதியானியர்கள் வணிகர்களாக இருந்தார்கள். இஸ்ரயேலர்களுடன் திருமண உறவு வைத்திருந்தார்கள். ஆனால் பிற்காலத்தில் இந்த உறவில் மாற்றம் ஏற்படுகிறது. இரண்டு இனத்தினரும் பகைவர்களாக மாறுகின்றார்கள்.

மோசே மிதியானில் வாழ்ந்துகொண்டிருக்கும் இக்காலகட்டத்தில் எகிப்தில் காட்சி மாறுகிறது. மோசேயைக் கொல்லத் தேடிய பார்வோன் மன்னன் இறந்துவிடுகின்றான். இந்தப் பார்வோனின் பெயர் கொடுக்கப்படவில்லை. புதிய பார்வோனின் ஆட்சியில் இஸ்ரயேல் மக்களின் அடிமைத்தனம் வலுக்கிறது. பலவிதமான கொடுமைகளுக்கும் அவர்கள் ஆளாக்கப்படுகிறார்கள். எனவே அவர்கள் அழுது புலம்புகின்றனர். தங்கள் நிலையைக் குறித்து கடவுளிடம் முறையிடுகின்றனர். பெரும்பாலான அறிஞர்களின் கருத்துப்படி எகிப்தை ஆட்சி செய்த இரண்டாம் இராம்சேசு காலத்தில்தான் இஸ்ரயேல் மக்கள் பலவிதமான கொடுமைகளுக்கும் உட்படுத்தப்பட்டனர். இரண்டாம் இராம்சேசு தேசபக்தி மிகுந்தவன். மாறுபட்ட இனங்களால் நிறைந்திருந்த எகிப்து நாட்டை ஓரின மக்களின் ஆதிக்கத்தில் கொண்டுவர விரும்பினான். இதனால் வேற்றின மக்களை கட்டாய வேலைகளுக்கு உட்படுத்தினான். வேற்றின மக்கள் ஆண் குழந்தைகள் பெற்றுக்கொள்வதைத் தடைசெய்தான். எல்லா ஆண் குழந்தைகளையும் கொல்வதால் தனக்கு எதிரிகள் உருவாகமாட்டார்கள் என நினைத்தான். திருப்பாடல் 137 ல் வரும் குழந்தைகளைப் பிடித்து பாறையின்மேல் மோதி அடித்தல் பார்வோன் மன்னனின் செயலைச் சுட்டிக்காட்டுவதாககூட இருக்கலாம் என்பது ஒருசில அறிஞர்களின் கருத்தாக இருக்கிறது. விவிலியம் சாராத மூலங்களிலிருந்தும் இஸ்ரயேல் மக்கள் எகிப்தில் வாழ்ந்ததாகக் கருதப்படும் இக்காலகட்டத்தில் பல கட்டடப் பணிகள் நடந்ததாக நாம் அறியவருகிறோம் குறிப்பாக அக்காலகட்டத்தில் கர்னாக், அபு-சிம்பல், இராம்சேசு, பித்தோம் முதலிய நகர்கள் கட்டியெழுப்பப்பட்டன. இந்த நகர்களின் கட்டடப் பணிகளுக்கு ஏராளமான பணியாட்கள் தேவைப்பட்டனர். அந்த அளவிற்கு அடிமைகளோ, சிறைக்கைதிகளோ அப்போது எகிப்தில் இல்லை. எனவே எகிப்தில் வாழ்ந்த எபிரு அல்லது அபிரு என்று அழைக்கப்பட்ட மக்களினம் எகிப்தியர்களால் அடிமைகளாய் நடத்தப்பட்டார்கள், கடினமான வேலைகள் செய்ய கட்டாயப்படுத்தப்பட்டார்கள் என வரலாறு பதிவுசெய்கிறது. இந்த எபிரு அல்லது அபிரு என்று அழைக்கப்பட்டவர்கள் இஸ்ரயேல் மக்களே என்பது பலருடைய கருத்து.

இஸ்ரயேல் மக்களின் மோசமான நிலையை விடுதலைப் பயணம் நூல் இரண்டு வார்த்தைகளில் வெளிப்படுத்துகிறது. யாவே மரபில் oniy என்ற சொல்லும் (விப 3:7) ஏலோகீம் மரபில் lagan என்ற சொல்லும் (விப 3:9) இதற்குப் பயன்படுத்தப் படுகின்றன. oniy என்ற சொல்லுக்கு துன்புறுத்தப்படுதல், ஏழ்மை, மனமுடைந்தநிலை என்ற பொருள்கள் உண்டு. lagan என்ற சொல்லுக்கு பிழிதல், ஒடுக்குதல் போன்ற அர்த்தங்கள் உண்டு. அதாவது இஸ்ரயேல் மக்கள் எகிப்தியர்களால் அடக்கி ஒடுக்கப்பட்டார்கள், துன்புறுத்தப்பட்டார்கள், பிழிந்தெடுக்கப்பட்டார்கள். அதனால் மனமுடைந்தவர்களாக, ஏழ்மையில் உழன்றவர்களாக இருந்தார்கள் என்று கூறலாம். எனவேதான் அவர்கள் அழுது புலம்புகின்றனர்; கடவுளிடம் முறையிடுகின்றனர். அடிமைத்தனத்திலிருந்து எப்படியாவது வெளிவரவேண்டும் என விரும்புகின்றனர். கடவுளும் அவர்களின் புலம்பலைக் கேட்கின்றார். ஆபிரகாமுடனும், யாக்கோபுடனும் தாம் செய்திருந்த உடன்படிக்கையை நினைவு கூர்கின்றார். இஸ்ரயேல் மக்களின் இந்தப் புலம்பல்களும் முறையீடுகளும் திருப்பாடல்களில் வருகின்ற புலம்பல் பாடல்களை நினைவூட்டுகின்றன. உதாரணமாக,திபா 74 ஐக் கூறலாம். இப்பாடலில் மக்கள் ஒரு குழுவாக கடவுளிடம் தங்கள் வேண்டுதல்களை எழுப்புகின்றனர்; உடன்படிக்கையை நினைவுகூர்ந்து அருள்புரிய ஆண்டவரைக் கேட்கின்றனர். அவர்களின் வேண்டுதல் விண்ணகத்தை எட்டுகிறது. கடவுள் அவர்களின் வேண்டுதலைக் கேட்கிறார், குலமுதுவர்களுடன் செய்த உடன்படிக்கையை நினைவுகூர்கிறார்.

எகிப்தில் நிலமை இப்படியிருக்க மோசே மிதியானில் தனது மாமனாரின் ஆட்டு மந்தையை மேய்த்து வருகிறார். விப 3:;1 இல் மோசேயின் மாமனார் பெயர் இத்திரோ எனக் குறிப்பிடப்படுகிறது. விவிலியத்தில் மோசேயின் மாமனாரின் பெயர் பற்றிய சில குளறுபடிகள் உள்ளன என்பதை மறுக்கமுடியாது. உதாரணமாக, விப 3:1; 4:18 மற்றும் 18:1 ஆகிய

இடங்களில் மோசேயின் மாமனார் இத்திரோ என அழைக்கப்படுகின்றார். விப 2 இல் அவரது பெயர் இரகுவேல் எனக் கூறப்படுகிறது. நீத 4:11 இல் அவரது பெயர் ஓபாபு எனக் கூறப்படுகிறது. ஆனால் எண் 10:29 இல் ஓபாபு இரகுவேலின் மகன் எனக் குறிப்பிடப்படுகிறார். மோசேயின் மாமனாரின் உண்மையான பெயர் என்ன என்ற கேள்வி நம்முள் எழுகிறது. விவிலியத்தில் குறிப்பிடப்படுகின்ற மூன்று பெயர்களில் ஓபாபு என்ற பெயர் எண் 10:29 இல் இரகுவேலின் மகன் எனக் கூறப்படுவதால் இந்தப் பெயரை விட்டுவிடலாம். மீதமிருக்கின்ற இரண்டு பெயர்களில் மோசேயின் மாமனார் பெயர் என்ன? சில இடங்களில் இரகுவேல் என்றும் சில இடங்களில் இத்திரோ என்றும் அழைக்கப்படுகிறார். இதில் எது உண்மை? ஒருசில அறிஞர்களின் கருத்துப்படி இரகுவேல் என்பது குலப்பெயராக இருக்கலாம். இத்திரோ என்பதுதான் உண்மையான பெயராக இருக்கலாம். மோசேயின் மாமனாரின் பெயரைச் சுற்றி பல மரபுகள் இருப்பதை உணரமுடிகிறது.

தனது மாமனாரின் ஆட்டு மந்தைகளை மேய்த்துவந்த மோசே ஒருநாள் கடவுளின் மலையாகிய ஒரேபு மலைக்கு ஆடுகளுடன் வருகின்றார். இந்த மலை சீனாய் மலை என்றும் ஒரு சிலரால் அழைக்கப்படுகிறது. ஆடுகளை மேய்த்துக்கொண்டு மோசே ஒரு முட்புதர் அருகில் வருகின்றார். கடவுளின் பிரசன்னம் அந்த முட்புதரில் உள்ளது. மோசே அந்த முட்புதரைப் பார்க்கும்போது அது நெருப்பால் எரிந்துகொண்டிருக்கிறது; ஆனால் அந்த முட்புதர் தீய்ந்துபோகவில்லை. மோசே அதை ஆர்வத்துடன் பார்க்கிறார். அவரது சிந்தையில் இயற்கையான ஒரு நிகழ்வாக அது அவரை நெருடுகிறது. முட்புதர் தீய்ந்து போகாதது அவருக்கு ஆச்சரியத்தைக் கொடுக்கிறது. எரிந்துகொண்டிருக்கும் முட்புதரின் அருகில் சென்று அதை பார்க்க முனைகின்றார். அதைப் பற்றி அறிந்துகொள்ள விரும்புகின்றார். முட்புதரில் ஆண்டவருடைய பிரசன்னம் இருப்பதை மோசே அறிந்திருக்கவில்லை. மோசே முட்புதரை நெருங்குவதைப் பார்த்ததும் முட்புதரிலிருந்து ஆண்டவர் மோசையை அழைக்கின்றார். மோசே! மோசே! என்ற குரல் முட்புதரிலிருந்து வருவதைக் கேட்டதும் மோசே இதோ நான் எனப் பதிலளிக்கின்றார். இங்கே அணுகி வராதே; உன் பாதங்களிலிருந்து மிதியடிகளை அகற்றிவிடு; ஏனெனில் நீ நின்று கொண்டிருக்கிற இந்த இடம் புனிதமான நிலம் என்று மோசேக்கு கூறப்படுகிறது. மோசே குரலைக் கேட்கிறார்; ஆனால் யார் அவருடன் பேசுவது என்பதை அறிந்திருக்கவில்லை. கடவுளின் பிரசன்னம் அங்கே இருப்பதை அவர் தெரிந்திருக்கவில்லை.எனவே ஆண்டவரே தன்னை மோசேக்கு அறிமுகப்படுத்துகின்றார் உங்கள் மூதாதையரின் கடவுள், ஆபிரகாமின் கடவுள், ஈசாக்கின் கடவுள், யாக்கோபின் கடவுள் நானே என்று தன்னை மோசேக்கு வெளிப்படுத்துகின்றார். தன்னுடன் பேசியது கடவுள்தான் என்பதை மோசே அறிந்துகொள்கின்றார். ஆனால் அவரை உற்றுநோக்க மோசேக்கு துணிச்சல் இல்லை. அவரது முகத்தை மூடிக்கொள்கின்றார். மோசே ஆண்டவரைச் சந்திக்கும் இந்த நிகழ்வு ஒரு அழைத்தல் நிகழ்வு. விவிலியத்தில் வருகின்ற பல அழைத்தல் நிகழ்வுகளில் காணப்படும் பல சிறப்புக்கூறுகள் இந்த அழைத்தல் நிகழ்விலும் காணப்படுகின்றன. உதாரணமாக, விவிலியத்தில் கிதியோனின் அழைத்தல் (நீத 6) மற்றும் இறைவாக்கினர்களான சாமுவேல் (1 சாமு 3), எசாயா (எசாயா 6), எரேமியா (எரேமி 1) மற்றும் எசேக்கியேல் (எசேக் 1-3) ஆகியோரின் அழைத்தல் நிகழ்வுகளைக் கூறலாம். இந்த அழைத்தல் நிகழ்வுகள் பொதுவாக ஒரு இறையனுபவம் அல்லது இறை-மனித சந்திப்புடன் தொடங்குகின்றன. மோசேயின் அழைத்தல் எரியும் முட்புதரில் ஆண்டவருடைய தூதர் தோன்றுவதுடன் தொடங்குகிறது. அதைத் தொடர்ந்து அழைப்பவருக்கும் அழைக்கப்படுபவருக்கும் இடையே உரையாடல் நடக்கிறது. அழைக்கப்படுபவர் எதற்காக அழைக்கப்படுகிறார் என்பது அவருக்குக் கூறப்படுகிறது. அழைக்கப்படுபவர்கள் அழைப்பை உடனே ஏற்றுக்கொள்வதில்லை. தயக்கம் காட்டுகின்றனர். தங்கள் இயலாமையைப் பல்வேறு வழிகளில் எடுத்துரைக்கின்றனர். ஆனால் அழைப்பவர் அவர்களுடன் இருப்பதாக உறுதி கூறுகிறார். எல்லாவிதமான துன்பங்களிலிருந்தும் அவர்களைக் காப்பதாக உறுதியளிக்கிறார். சில அழைத்தல் நிகழ்வுகளில் அந்த உறுதி சில அடையாளங்களின் வழியாக கொடுக்கப்படுகிறது. இறுதியாக அழைக்கப்படுபவர் அழைப்பை ஏற்கிறார்; அவரது பணியைத் தொடர்கிறார். மோசேயின் அழைப்பிலும் மேலே கூறப்பட்ட கூறுகளைக் காண்கிறோம் மோசேயின் அழைப்பில் காணப்படும் சிறப்புக் கூறுகளை அடுத்த வாரத்தில் சிந்திப்போம்.

பயணம் தொடரும்...



ஞாயிறு

# மறையுரை

## பொதுக்காலம் 25-ம் ஞாயிறு

18-09-2022

முதல் வாசகம் – ஆமோஸ் 8:4-7
இரண்டாம் வாசகம் – 1 தீமொத்தேயு 2:1-8
நற்செய்தி வாசகம் – லூக்கா 16:1-13

மறையுரை வழங்குபவர்

அருட்பணி. S. லூயிஸ் பிரிட்டோ
இயக்குனர்
கலைக் காவிரி, நுண்கலைக் கல்லூரி
திருச்சி



இயேசுவின் அன்பானவர்களே இன்று பொதுக்காலத்தின் 25 ஞாயிறு வழிபாட்டை சிறப்பிக்கின்றோம்.

**மையச் செய்தி:**

1. ஏழைகள் பக்கமே இறைவன் இருக்கின்றார்.

2.கடவுளுக்கும் செல்வத்துக்கும் நாம் பணிவிடை செய்ய முடியாது.

3.அனைவருக்காகவும் தூய உள்ளத்தோடு இறை வேண்டல் செய்வோம்.

கி.மு. 8-ஆம் நூற்றாண்டில் வாழ்ந்தவர் இறைவாக்கினர் ஆமோஸ். அவர் காலத்திலேயே ஏழைகளை நசுக்கி, அநீதி செய்து, சொத்து சேர்த்துக் கொண்டிருந்த பணக்காரர்கள் வாழ்ந்தார்கள். அவர்களை எதிர்த்து, கடவுளின் வார்த்தையை அறிவித்தவர் இறைவாக்கினர் ஆமோஸ். கடவுள் ஏழைகள் பக்கம் எப்போதும் இருக்கிறார் என்ற செய்தியை உரைத்தவர். இறைவாக்குப் பணி என்பது நீதியை நிலை நாட்டுவதற்காகப் போராடுகின்ற பணி ஆகும். இன்றும் ஏழைகளுக்காக நாம் குரல் கொடுக்கும் போதெல்லாம் இறைவாக்குப் பணியை செய்கிறோம்.

(எ.கா) புனித அன்னை தெரசா, மறைந்த அருட்தந்தை ஸ்டான்ஸ் ஸ்வாமி சேச ,மேதா பட்கர், அம்பேத்கர், தந்தை பெரியார் ஆவர்.

உலக செல்வத்துக்கும், கடவுளுக்கும் நாம் ஒருபோதும் பணிவிடை புரிய முடியாது. இவை இரண்டும் ஒன்றோடு ஒன்று இணைய முடியாது. நேர்மையற்ற வீட்டுப் பொறுப்பாளர் முன் மதியோடு செயல்பட்டது போல நாமும் நிம்மதியோடு செயல்பட்டு கடவுளின் இல்லத்துக்குள்ளே நுழைவோம். சிறியவற்றில் நேர்மையற்றோர், பெரியவற்றிலும் நேர்மையற்றவராய் இருப்பர்.

இறைப்பற்றும், கண்ணியமும் நிறைந்தவர்களாய் அனைவருக்காகவும் மன்றாடுவோம். குறிப்பாக, நம் தலைவர்களுக்காக மன்றாடுவோம் சினத்தையும் சொர்ப்பூசலையும் அகற்றித்தூய உள்ளத்தோடு கைகளை உயர்த்தி இறைவனிடம் செபம் செய்வோமாக.

ஆமென்.




# பொதுக்காலத்தின் 25-ம் ஞாயிறு

ஆமோஸ். 8:4–7, 1 தீமோ. 2 : 1–8. லூக். 16:1–13

**18-09-2022**



பா. சேவியர்
பட்டாபிராம், சென்னை.

## திருப்பலி முன்னுரை

செல்வத்தின் மீதான பற்றைத் தூக்கி எறிந்துவிட்டு, இறைப்பற்றும் கண்ணியமும் நிறைந்தவர்களாய் வாழ வரம் வேண்டி, புதியதோர் உடன்படிக்கையின் இணைப்பாளரான இறையேசுவின் சந்நதியில் கூடியுள்ள அன்பு இறைமக்களே, வல்லமை மிகு வசீகர வார்த்தையால் வல்ல தேவனை அப்பரச வடிவில் மாற்றக்கூடிய வரம் பெற்ற அருட்தந்தையே உங்கள் அனைவரையும் பொதுக்காலத்தின் 25–ஆம் ஞாயிறு வழிபாட்டிற்கு அன்புடன் வரவேற்கிறேன்.

ஆண்டவராகிய செல்வந்தர் நமக்குக் கொடுத்த செல்வங்கள், கொடைகள், திறமைகள், ஆற்றல்கள் அனைத்தையும் பயனுள்ள முறையில் பயன்படுத்தி முன்மதியுடன் வாழ நாம் அழைக்கப்படுகிறோம்.

பகிர்ந்து வாழ்தல், செபித்து வாழ்தல், முன்மதியுடன் வாழ்தல் என்ற மூன்று முத்தான கருத்துக்களை தாங்கி வருகிறது இன்றைய வழிபாடு.

உலகில் மனிதர்கள் பணத்திற்காக என்னவெல்லாம் செய்கிறார்கள் என்பதையும், தவறிழைத்த பின்பு தங்களைக் காப்பாற்றிக்கொள்ள எவ்வாறு செயல்படுகிறார்கள் என்பதையும் விளக்கி, அறிவுடைமை, முன்மதி, விவேகம், பொருட்களைப் பயன்படுத்தும் முறை போன்றவற்றைப் பற்றிச் சிந்தித்து வாழக் கற்றுத் தருகிறது இன்றைய திருவார்த்தை வழிபாடு.

கடவுளை எஜமானாக ஏற்று, அவருக்கு மட்டுமே ஊழியம் செய்யும் நம்பகத்தன்மை கொண்டவராய், பொறுப்புள்ள பணியாளராய், பொருளைவிட மனிதம் பல்மடங்கு மேலானது. செல்வத்தை விட மனிதர்கள் வழியே கிடைக்கும் உறவே முக்கியமானது என்பதை உணர்ந்து அதன்படி வாழ்ந்திட இத்திருப்பலி கொண்டாட்டத்தில் இறைவனை மன்றாடுவோம்.

## முதல் வாசக முன்னுரை

நீதிக்காக போர்க்கொடி உயர்த்திய புரட்சியாளனாய், ஏழைகளின் நண்பனாய் வாழ்ந்த இறைவாக்கினர் ஆமோஸ், வறியவர்களை வஞ்சிக்கும், எளியவர்களை ஏமாற்றும் செல்வந்தர்களை கடுமையாகச் சாடுகிறார். ஏழை எளியவர்களை நசுக்கி, பணத்தை சம்பாதிக்கிற செயலை இறைவன் ஒருபோதும் மன்னிப்பதில்லை என்ற கருத்தை சுமந்துவரும் இம்முதல் வாசகத்தை கவனமுடன் கேட்போம்.

## இரண்டாம் வாசக முன்னுரை

கிறிஸ்தவ நன்னெறியின் முதல் கட்டமாக மக்களை செபத்தில் ஒன்றிக்கும்படியும், ஒருவர் மற்றவருக்காய் செபிக்கும்படியும் எடுத்துரைக்கின்ற பவுலடிகளாரின் கருத்தை இன்றைய இரண்டாம் வாசகமாக திருஅவை நமக்கு வழங்கியுள்ளது. எப்படி செபிக்க வேண்டும்? யாருக்காக செபிக்க வேண்டும்? ஏன் செபிக்க வேண்டும்? என்பதை எடுத்துரைக்கும் இவ்வாசகத்தை கவனமுடன் கேட்போம்.

1) புதியதோர் உடன்படிக்கையின் இணைப்பாளரான அன்பு இறைவா, உம் நற்செய்தியை அறிவிப்பவராகவும், திருத்தூதராகவும், விசுவாசத்தையும், உண்மையையும் கற்பிக்கும் போதக ராகவும் உழைக்க உம்மால் தேர்ந்து கொள்ளப்பட்ட எம் திருத்தந்தை, ஆயர்கள், அருட்பணியாளர்கள் அனைவரும் தங்களிடம் ஒப்படைக்கப் பட்ட திருப்பணியினை செவ்வனே செய்திட அவர்களுக்கு வேண்டிய ஆற்றலையும், ஆரோக்கியத்தையும் நிறைவாகத் தந்தருள வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

2) தலைவர்கள் வழியாக எம்மை பராமரிக்கும் அன்பு இறைவா, எம்மை வழி நடத்தும் ஆட்சியாளர்கள், மக்கள் நலத்திட்டங்களில் முழு கவனம் செலுத்தி, மத நல்லிணக்கம் கொண்டு, வேற்றுமையில் ஒற்றுமை கண்டு, லஞ்சம் தவிர்த்து அயராது உழைக்க, அவர்களது சிந்தனையில் தெளிவும், செயலில் தூய்மையும், மக்கள் நலப் பணியில் மனத்திடமும் தந்தருள வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

3) ஒருவர் மற்றவருக்காய் மன்றாடி வாழ அழைக்கும் அன்பு இறைவா, உம் திருமுன் கூடியுள்ள நாங்கள் அனைவரும் ஒரே குடும்பம் என்ற உணர்வினைப் பெற்று வாழவும், ஒருவர் மற்றவருக்காய் மன்றாடி மகிழவும், மற்றவர் தேவையை உணர்ந்து ஈந்து வாழவும், மற்றவரிடம் பெற்ற உதவி களை மறவாது நன்றியுடன் வாழவும் வரமருள வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

4) கருணையே வடிவான இறைவா, நோயாலும், முதுமையாலும், இல்லா மையாலும், இயலாமையாலும் வாடும் மக்களை கருணையுடன் கண்பாரும். தங்களை பீடித்துள்ள நோய் விலகி அவர்கள் நலமடைய முதுமையிலும் மன நிறைவைப் பெற்று வாழ, அருள் புரிய வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

5) பகைவருக்கும் அன்பு செய்து வாழ்ந்து காட்டிய அன்பு இறைவா, பகைவருக்காக செபிப்பவன் கிறிஸ்துவ வாழ்வின் கொடுமுடியை எட்டிவிடு கிறான் என்பதை நாங்கள் உணர்ந்து, நாங்கள் எங்களது செபத்தில் சுய நலத்தை தேடாது, அனைத்து மக்களுக் காகவும், குறிப்பாக பகைவர்களுக்காக செபிக்கும் மனப்பக்குவத்தை எமக்கு தந்தருள வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

## எச்.ஏ. கிருட்டிணப்பிள்ளை இயற்றிய இரட்சணிய மனோகரம்



**இரவில் மோசமொன் றின்றியே**
**உரிமை யாயுறக் காட்டினை**
**பரமனே பதி னாயிரம்**
**சரணம் யேசு தயாபரா!**



இயேசுவே! வானுலகத் தலைவரே! இரவுக் காலத்தில் என்னைத் தீமைகள் சூழாதவாறு ஆள்கின்ற இறைவா! என்னுடைய வணக்கங்கள் பல்லாயிரமும் உமக்கே உரிமையுடையனவாகட்டும்.



# வத்திக்கான் செய்திகள்

சிரியாவின் உள்நாட்டுப் போரினால் 14ம் மில்லியம் மக்கள் இடம் பெயர்ந்து அகதிகளாக இருக்கின்றார்கள். அவர்கள் சிரியாவின் மொத்த மக்கள் தொகையில் அவர்களின் எண்ணிக்கை பாதிக்கும் மேற்பட்டதாகும். அவர்களுக்காக திறந்த மருத்துவமனைகளைத் திறக்கவுள்ள ஏவிஎஸ்ஐ என்ற அறக்கட்டளையின் உறுப்பினர்களைப் பாராட்டியதோடு, இத்தகைய மக்களின் துன்பங்களைக் களைய எடுக்கும் இப்பணி, மக்களின் உடல், மற்றும் ஆன்மீக நலன்களை மையப்படுத்தியதாக இருக்க வேண்டும். இத்தகைய சேவைக்காக திருச்சபை அழைக்கப்படுகின்றது என்று பாப்பரசர் கூறியுள்ளார்.

கஜகஸ்தானில் செப்டம்பர் 13ம் தேதியன்று நடைபெறும் உலக இளைஞர் தினக் கொண்டாட்டத்தில் கலந்து கொள்வீர்களா என்று சிஎன்என் என்ற செய்தி நிறுவனம் பாப்பரசரைக் கேட்டபோது, தனது முழங்கால் வலியின் காரணமாக போக இயலாது, இருந்தாலும் தான் போகத் திட்டமிட்டுள்ளதாகக் கூறினார், மேலும், நான் போவேன் அல்லது அடுத்த போப் இருபத்தி நான்காம் அருளப்பர் போவார் என்று நகைச் சுவையாகக் கூறினார்.

குடும்பங்களில் பிரமச்சரியம் இல்லை என்று பாப்பரசர் கூறியுள்ளார்

அமெரிக்காவைச் சேர்ந்த தொன்போஸ்கோ சலேசியன் மிஷன் எத்தியோப்பியாவைச் சேர்ந்த டிக்ரே வாழ் மக்களுக்கு கோதுமை, வைட்டமின் மாத்திரைக்ள், சமையல் எண்ணைய், நூடுல்ஸ், அரிச, உப்பு, சுகாதாரப் பொருட்கள், சேப்பு, 400 போர்வைகள் போன்றவற்றை அனுப்பியுள்ளது.

(6-9-22) ஏப்ரல் 2013 இல் கடத்தப்பட்டதில் இருந்து காணாமல் போன பேராயர் யோஹன்னா இப்ராஹிம்க்குப் பதிலாக அலெப்போவின் பேராயராக பூட்ரோஸ் காசிஸ் தேர்ந்தெடுக்கப்பட்டதாக சிரியாக் ஆர்த்தடாக்ஸ் சர்ச் அறிவித்துள்ளது.

உக்ரேனின் பேராயர் இகோர் இசிசென்கோ தனது ஆர்த்தடாக்ஸ் மறைமாவட்டத்தை கத்தோலிக்கத் திருச்சபையோடு இணைத்துள்ளார். இந்தப் பணி உக்ரேனின் போருக்கு முன்னதாகவே 2015லிருந்து ஆரம்பித்து நடைமுறையில் இருந்தது.



# திருக்குறள் வழங்கும் சமூக நெறி



சிந்தனையாளர்
அருட்சகோதரி. **ஜெஸிந்தா ஜான்சன்** FSPM

## குறள் - 11

**வானின் றுலகம் வழங்கி வருதலால்**
**தானமிழ்தம் என்றுணரற் பாற்று**

## குறள் விளக்கம்

மழை பெய்ய உலகம் வாழ்ந்து வருவதால், மழையானது உலகத்து வாழும் உயிர்களுக்கு அமிழ்தம் என்று உணரத்தக்கதாகும்.

## சிந்தனை

அமிழ்தம் என்பது, அழியாது அமரத்துவம் தரவல்லது. அழிவின்மை 'அமிர்தா' என்ற வடமொழிச் சொல்லிலிருந்து வந்த அயற்சொல் ஆகும். பஞ்சம் பட்டினி சாவுக்கு மழையின்மையே முக்கிய காரணம். பு+மியை செழிப்பாக்கி வாழ்வளிப்பது மழை என்பதால் அதனை அமரத்துவம் வாய்ந்த அமிழ்தத்திற்கு ஒப்பிட்டு பேசுகிறார் வள்ளுவர்

ராஜஸ்தான் குஜர் என்ற பழங்குடியினரிடம்,

உங்கள் ஊரில் மழை எப்படி? என்று கேட்டபோது,

நல்ல மழை ஐயா என்றனர். சென்ற வருடம்?

எல்லா வருடமும் நல்ல மழை தான்?

அது எப்படி?

நல்ல மழை பெய்யற இடத்திற்கு குடிபெயர்ந்து விடும் மாடுகளை மேய்க்கும் நாடோடிகள் நாங்கள் ஐயா என்றனர்.

மழையை நாடி மனிதவாழ்வு உள்ளது. நீருள்ள இடங்களிலேயே நாகரீகம் பிறந்தது. இதிலிருந்து மழையின் முக்கியத்துவத்தை உணரலாம்.

எசாயா இறைவாக்கினரும் மழையும் பனியும் வானத்திலிருந்து இறங்கி வருகின்றன. அவை நிலத்தை நனைத்து, முளை அரும்பி வளரச் செய்து, விதைப்பவனுக்கு விதையையும், உண்பவனுக்கு உணவையும் கொடுக்காமல், அங்கு திருப்பிச் செல்வதில்லை. எசா 55:10ல் குறிப்பிடுகின்றார்.

இறைவனின் இருப்பிடமாகிய வானகத்திலிருந்து பொழிவதனால் மழையை இறைவனின் கருணையாகவும், அருளாகவும் எண்ணி வியக்கிறோம்.

வானம் எனக்கு ஒரு போதி மரம்: நாளும் எனக்கு அது சேதி தரும் என்று தனது அனுபவத்தை ஒரு கவிஞன் அற்புதமாக வெளிப்படுத்தியுள்ளான். வானம் ஒரு அற்புதம். அதனை இரவும் பகலும் ரசிப்பதும் ஆராய்வதும் அலாதி இன்பம்.

இயற்கை மனதை செம்மைபடுத்தும் திறந்தவெளி பள்ளிகள் என்பார் வில்லியம் வோர்ட்ஸ்வெத். அந்த அளவுக்கு ஆச்சர்யங்களையும், புதிய சிந்தனைகளையும் தர வல்லது. 'வான்சிறப்பு' என்ற இந்த அதிகாரம். மேலும் வானகத் தந்தையையும், மாட்சிமிக்க அவரது படைப்புகளையும் வியந்து பார்க்க நம்மைத் தூண்டுகிறது.

இயற்கை மனிதனது தேவைக்கென்று பல நன்மைகளைத் தருகிறது. மனிதர் தன் சுயநலத்திற்காக அதைச் சீரழிக்கக் கூடாது என்கிறார் காந்தியடிகள். இலவசமாக இயற்கை வழங்கும் இன்பங்களை அனுபவிக்க அனைவருக்கும் உரிமை உண்டு. சுயநலத்திற்காக அதனை மனிதன் அழிக்கிறான். காடுகளை அழித்து மழையை தடுக்கிறான் அதனால் பஞ்சத்தையும் பட்டினியையும் வரவழைக்கின்றான்

படைப்பு பொருட்களில் பரமன் இருக்கின்றார். படைப்பு பொருட்களைப் பார்த்து பரம்பொருளை நாம் அறிந்து கொள்ள முடியும் என்கிறது திருமறை. இயற்கையிலிருந்து கொடுத்தல், செழிப்பாக்குதல், வாழ்வளித்தல், வளமாக்குதல் போன்ற பல நல்ல காரியங்களை நாம் கற்றுக் கொள்வோம்.



# இந்த வார திருப்பலி வாசகக் குறிப்புகள்

## பொதுக்காலம் 25-ம் ஞாயிறு - 18.09.22

**18.09.2022 – ஞாயிற்றுக்கிழமை**

முதல் வாசகம் : ஆமோஸ் 8:4-7
இரண்டாம் வாசகம் : 1 திமொத்தேயு 2:1-8
நற்செய்தி : லூக்கா : லூக்கா 16:1-13

**19.09.2022 – திங்கட்கிழமை**

முதல் வாசகம் : பழமொழி ஆகமம் 3:27-34
நற்செய்தி : லூக்கா 8:16-18

**20.09.2022 – செவ்வாய்கிழமை**

முதல் வாசகம் : பழமொழி ஆகமம் 21:1-6இ 10-13
நற்செய்தி : லூக்கா 8:19-21

**21.09.2022 – புதன்கிழமை**

*புனித மத்தேயு திருவிழா*

முதல் வாசகம் : எபேசியர் 4:1-7, 11-13
நற்செய்தி : மத்தேயு 9:9-13

**22.09.2022 – வியாழக்கிழமை**

முதல் வாசகம் : சபை உரையாளர் 1:2-11
நற்செய்தி : லூக்கா 9:7-9

**23.09.2022 – வெள்ளிக்கிழமை**

முதல் வாசகம் : சபையுரையாளர் 3:1-11
நற்செய்தி : லூக்கா 9:18-22

**24.09.2022 – சனிக்கிழமை**

முதல் வாசகம் : சபையுரையாளர் 11:9-12, 8
நற்செய்தி : லூக்கா 9:43-45



"Hope has two beautiful daughters; their names are Anger and Courage. Anger at the way things are, and Courage to see that they do not remain as they are.


- Saint Augustine



# திருவிவிலியமும் திருக்குறளும்

வழங்கும்

# ஆன்மீகச் சிந்தனை




**அகழ்வாரைத் தாங்கும் நிலம்போலத் தம்மை
இகழ்வார்ப் பொறுத்தல் தலை.**

அதிகாரம் 16

பொறையுடைமை

குறள் – 151

**பொருள்:** தன்னை வெட்டுவோரையும் விழாமல் தாங்குகின்ற நிலம் போல, தம்மை இகழ்வாரையும் பொறுப்பதே தலையான பண்பாகும்.

என்ன நேர்ந்தாலும் ஏற்றுக்கொள்; இழிவுவரும்போது பொறுமையாய் இரு. (சீராக்கின் ஞானம் 2:4)

ஏகலைவன் காட்டில் வசித்து வந்த ஒரு வேடன். காட்டில் ஓநாய்கள் மான்களை வேட்டையாடுவதை பார்த்து மனம் தாங்காமல் ஓநாய்களை வீழ்த்த வில் வித்தை கற்றுக் கொள்ள எண்ணினான். குரு துரோணாச்சாரியார் வில் வித்தையில் சிறந்து விளங்கிய ஆசான். பாண்டவர்களுக்கும் கௌரவர்களுக்கும் ஆசிரியராக இருந்து அவர்களுக்கு வில்வித்தையைப் பயிற்றுவித்து வந்தார். ஆகவே அந்த சிறந்த ஆசிரியரிடம் வில்வித்தை கற்றுக் கொள்ள எண்ணினான் ஏகலைவன். எனவே குரு துரோணாச்சாரியாரிடம் சென்று வில் வித்தையைக் கற்றுத் தருமாறு வேண்டினான். ஆனால் அவரோ அரசு குடும்பத்தின் குரு என்பதால் ஏகலைவன் போன்ற பாமரனுக்கு குருவாக இருக்க முடியாது என்று கூறி ஏகலைவனின் விருப்பத்தை நிராகரித்துவிட்டார்.

இளவரசனை தவிர வேறு எவரும் தற்காப்பு கலையில் சிறந்து விளங்கக் கூடாது என்பது அவர்களின் விதியின் நோக்கமாகும். அரசர் மட்டுமே குடிமக்களுக்கு பாதுகாவலனாக இருக்கவேண்டும் என்பதில் உறுதி செய்வதற்கு இந்த நடைமுறை பின்பற்றப்பட்டது. ஏகலைவன் ஒரு வேடனின் மகன் அதுவும் ஏழை. எனவே அவனை தனது சீடனாக ஏற்றுக்கொள்ள மறுப்பு தெரிவித்தார். எனவே அவருக்கும் தெரியாமல் மறைந்திருந்து அவர் கற்றுத் தரும் வில்வித்தையைக் கற்றுக்கொண்டான். பின்னர் களிமண்ணால் துரோணாச்சாரியார் சிலையைச் செய்து அதற்கு முன்பு தியானம் செய்து தினமும் கடின உழைப்புடன் வித்தையைக் கற்றுக் கொள்கிறான்.

வில்வித்தையில் சிறந்த வீரனான அர்ஜுனனை விட ஏகலைவனின் திறமை அதிகரித்தது. ஒருசமயம் அவன் வேட்டையாடும் பொழுது ஒரு நாய் குறைத்து தன் சத்தத்தை வெளிப்படுத்தி விடுமோ என்று எண்ணி அதன் வாயை பூட்டி விட்டான். வாய் பூட்டப்பட்ட அந்த நாய் துரோணாச்சாரியார் இருக்கும் இடத்திற்கு சென்றது அதை பார்த்த அர்ஜுனன் துரோணாச்சாரியாரின் அதிர்ந்தார்கள். இவ்வளவு சிறந்த வில் வித்தையைக் கற்றுக் கொண்டவன் யாரென்று என்பதை அறிய அதனைப் பின்தொடர்ந்தார்கள். குறிப்பிட்ட இடத்தில் நாய் நின்றது. அந்த இடத்தில் குரு துரோணரின் சிலையும், அருகில் ஏகலைவன் இருப்பதைக்கண்டு விவரத்தை அறிந்தனர். ஏகலைவனைப் பாராட்ட எண்ணாமல் தன் சிலை முன் பயிற்சி பெற்ற காரணத்தால் ஏகலைவனிடம் குருதட்சணையை கேட்கிறார். அதுவும் குருதட்சணையாக பணம், பொருள் எதுவும் கேட்காமல் ஏகலைவனின் வலது கை கட்டை விரலை கேட்டார். வலது கை கட்டை விரல் இல்லாமல் வில்வித்தை புரிவது சாத்தியமல்ல என்பதை ஏகலைவன் அறிவான். ஆனாலும் அதனை வெளிக்காட்டாமல் குருவிற்காக அவன் கேட்ட தட்சணையாக தன் கட்டை விரலை வெட்டி அவரிடம் கொடுத்தான். உயர்ந்த குடியில் பிறந்தவர்கள் எல்லாம் உயர்குடி மக்கள் அல்ல. எந்த இடத்திலும் நல்ல மனங்களை, நற்பண்புகளை வெளிப்படுத்துபவர்களே உயர்ந்த குடிமக்களாக எண்ணப்படுகிறார்கள். அவ்வாறுதான் ஏகலைவன் தன்னை இகழ்ந்த அனைவரும் அனைவர் முன்பும் பொறுமையைக் கையாள்கிறான். அனைவர் மனதிலும் இடம் பெறுகிறான்.

வலிமை உடையவரைவிடப்
பொறுமை உடையவரே மேலானவர்;
நகரை அடக்குகிறவரைவிடத்
தன்னை அடக்குகிறவரே சிறந்தவர்.
-(நீதிமொழிகள் 16:32)

அரசர் தாவீது தன் ஆட்சியை இழந்து தன் வீரர்களுடன் மலைமீது ஏறிச் சென்று கொண்டிருக்கும் பொழுது எதிரில் ஒருவன் அவனை பழித்துரைத்தான்.

எவராவது ஒருவர் அரசரைப் பழித்தாலோ அல்லது எதிர்த்தாலோ அவரைக் கொன்று விடுவார்கள். உயிரோடு விட்டு வைக்க மாட்டார்கள். ஆனால் இந்த இடத்தில் அரசர் தாவீது எதுவும் கூறாமல் அமைதியாக வருகிறார். கூட இருந்த படைவீரர்களுக்கு கோபம் வந்து அவனைக் கொன்றுவிட எத்தனிக்கும்போது தடுத்து விடுகிறார். பொறுமை காக்கின்றார். தாவீது பகூரிம் வந்தபோது சவுலின் குடும்பத்தையும் வீட்டையும் சார்ந்த ஒருவன் அவரை எதிர்கொண்டான். அவன் கேராவின் மகனான சிமயி. அவன் பழித்துக் கொண்டே எதிரே வந்தான். அவன் தாவீது மீதும், தாவீது அரசரின் எல்லாப் பணியாளர் மீதும் எல்லா மக்கள் மீதும், அவர்தம் வலமும் இடமும் இருந்த வீரர்கள்மீதும் கல்லெறிந்தான். சிமயி பழித்துக் கூறியது; இரத்த வெறியனே! பரத்தை மகனே! போ! போ!. நீ சிந்திய சவுல் வீட்டாரின் இரத்தப் பழி அனைத்தையும் ஆண்டவர் உன்மீது வரச்செய்துள்ளார். சவுலுக்குப் பதிலாக நீ ஆட்சி செய்தாய் அன்றோ! ஆண்டவர் உன் மகன் அப்சலோமின் கையில் அரசைத் தருவார்! இரத்த வெறியனான நீ உன் தீமையிலேயே அழிவாய். அப்போது செரூயாவின் மகன் அபிசாய் அரசரிடம் வந்து, இச்செத்த நாய் என் தலைவராம் அரசரைப் பழிப்பதா? இதோ நான் சென்று அவனது தலையைக் கொய்து எறிய எனக்கு அனுமதிதாரும் என்றான். அதற்கு அரசர் செரூயாவின் மக்களே! இதைப்பற்றி நீங்கள் கவலைக் கொள்ள வேண்டாம். அவன் பழிக்கட்டும்! ஒரு வேளை தாவீதைப் பழி! என்று ஆண்டவரே அவனுக்குச் சொல்லியிருந்தால், இவ்வாறு நீ ஏன் செய்தாய்? என்று யார் சொல்ல முடியும் என்றார். மீண்டும் தாவீது அபிசாயிடம் தம் பணியாளர் அனைவரிடமும் கூறியது; இதோ எனக்கு பிறந்த என் மகனே என் உயிரைப் பறிக்கத் தேடுகிறான். பென்யமின் குலத்தைச் சார்ந்த இவன் செய்யலாகாதோ? அவனை விட்டுவிடு! அவன் பழிக்கட்டும்! ஏனெனில் ஆண்டவரே அவனைத் தூண்டியுள்ளார். ஒருவேளை ஆண்டவர் என் துயரத்தை காண்பார். இன்று அவன் பழித்து பேசியதற்காக எனக்கு அவர் நன்மை செய்வார். தாவீது தன் ஆள்களோடு பயணத்தை தொடர்ந்தார். சிமயி அவருக்கு எதிராகப் பழித்துரைத்து கல்லெறிந்து, புழுதியை வாரித் தூற்றிக் கொண்டு மலையோரமாகச் சென்றான். (2 சாமுவேல் 16:5-13)

**பொறுத்தார் பூமி ஆழ்வார்**

என்று சொல்வார்கள். துன்பம் வருங்கால் பொறுமையாக இருத்தல் நல்லது. விட்டுக் கொடுப்பவர் கெட்டுப் போவதில்லை என்பதை உணர்ந்து வாழ பழகிக்கொள்ளவேண்டும். எல்லாவற்றுக்கும் மேலாக ஆண்டவராகிய இயேசுகிறிஸ்து எந்த ஒரு குற்றமும் இல்லாதவராக இருந்தும் நமக்காக, நம் மீட்புக்காக சிலுவைச் சாவை பொறுமையுடன் ஏற்றுக் கொண்டார். அவர் வழி நின்று நாமும் பொறுமையை கற்றுக் கொள்வோம்.

*இயேசுவுக்கே புகழ்*

– லீமா விக்டோரியா

